சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஆவணி மீ 26 உ
(1889)

உ

பிரதி விலை: ரூபா12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

புத்தகம்: 113

சித்திரபானு வருடம் கார்த்திகைத் திங்கள் 03ம் நாள்
(19.11.2002) கார்த்திகைப் பூரணை

இதழ்: 8

### இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் 2003 மே முதல் வாரத்தில் கொழும்பில் இந்துசமயமும் சமுதாயமும் என்ற கருப்பொருளில்

## உலக இந்து மாநாடு

### அமைச்சர் மகேஸ்வரன் வழிகாட்டலில் துரித நடவடிக்கை.

**உலக இந்து மாநாடொன்றை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடத்துவதென்று இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. இலங்கையில் முதலாம் இந்து மாநாடு 20 ஆண்டுகளுக்கு முன்பு 1982ஆம் ஆண்டு நடைபெற்றது. 2003 இல் நடைபெறவுள்ள இரண்டாம் உலக இந்து மாநாட்டை இலங்கைத் தலைநகரான கொழும்பில் நடத்துவதற்கான செயல்திட்டம் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மகாநாட்டு செயலாளர் நாயகமாகப் பேராசிரியர் சி. பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இம் மகாநாடு பற்றி அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப் பொன்றில் காணப்படும் இதர முக்கிய தகவல்கள் பின்வருமாறு.

**நோக்கங்கள்:**

1. மிகவும் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த இந்து சமயம், இந்து கலாசாரம் ஆகியவை ஆதி காலம் முதலாக உலகிலே நாகரிக வளர்ச்சியிற் பெருஞ் செல்வாக்கை ஏற்படுத்தி வந்துள்ளன. அவற்றின் அதி உன்னதமான பண்புகளை உலகின் பல்வேறு நாடு களிலுமுள்ள அறிஞர்கள் நீண்ட காலமாக மேற் கொண்ட ஆழமான ஆராய்ச் சிகளின் பெறுபேறாக மிக நுட்பமான கருத்துக்களை நூல்கள், ஆய்வுரைகள் என் பன வாயிலாக அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த மாநாட்டின் மூலமாக அவ்வாறாக வெளிவந்த சிந்தனைகளை, எமது தே சத்திலும் பிறநாடுகளிலும் உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்ய வாய்ப்பளித்தல்.
2. 21ஆம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழுகின்ற இந்துக்கள் எதிர் கொள்ளவிருக்கும் சவால் களையும் அவற்றைக் கையா ளக்கூடிய முறைகளையும் பற்றிய புரிந்துணர்வை ஏற் படுத்துதல்.
3. அண்மைக் காலங்களில் தங் கள் சொந்த நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து ஐரோப்பா,

(12ஆம் பக்கம் பார்க்க)



### நாவலனே! சற்குருவே!! போற்றி போற்றி

சிவம்பழுத்த செஞ்சுவையே தேனே பாகே தெவிட்டாத தெள்ளமிர்தத் திரளே மேலாந்
தவம் பழுத்த தனிவடிவே திருவெண் ணீறு தயங்குதிரு மேனியுடைக் குருவே மிக்க
வவம்பழுத்த புறச்சமய திமிர மோட்டி யத்துவித சுத்தசித்தாந் தத்தி னுண்மை
நவம் பழுத்த பொருள்காட்டிச் சைவ நாட்டு நாவலனே நினைக்காணு நாளெந் நாளே

-'சைவஉதயபானு'ப் பத்திராசிரியர் திரு.க.சரவணமுத்துப்பிள்ளை-



**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை27.11.2002 ஞாயிற்றுக்கிழமை.**

# நாவலரின் பெருமை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்
A.சிதம்பரநாதச் செட்டியார், M.A

ஆறுமுகநாவலர் தோன்றிய காலம் பாட்டுக்களிலேயே எல்லா நூல்களையும் இயற்ற வேண்டுமென்ற நோக்கம் மலிந்த காலம்; அவரவர் கற்ற கல்வியை அவரவர் பொருளேயென நினைத்துக் கொண்டு பிறர்க்கீந்தாற் குறைந்து விடுமென்று கருதிய காலம்; நாம் அரும்பாடுபட்டு அறிந்த பலவற்றை சிலநாளில் அறிந்து செல்ல நினைக்கும் இவர்க்கு நாம் கூறுவதோ வென்று கருதிய புலவரிருந்த காலம்; சுவடியொன்றிருக்குமேயாகில் அதனைப் பிறரெவர்க்குங் காட்டாது இல்லையென்றும் பலர் சொல்லி வந்தகாலம்; உதாரணமாக, 'மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், சிவ தருமோத்திரச்சுவடி பெற அரிதின் முயன்றும் முடியாமல் சுந்தரம் பிள்ளையென்ற ஒருவர் செய்த தந்திரத்தாலன்றோ அவரதனைப் பின்னர்ப் பெற்றார்? அம்பலவாண முனிவரிடம் அவர் பாடங் கேட்கச் சென்ற பொழுது விரைவில் அறிந்து கொண்டு செல்ல நினைத்து அவர் வந்திருப்பதாக வன்றோ கருதப்பட்டு முதலிற் பாடஞ் சொல்லி வைக்கப்படுதற்கு உரியரென மதிக்கப்பட்டாரல்லர். யமகத் திரிபந்தாதிகளும் சொற்சுவை மலிந்த கவிகளுமல்லவோ இப் புலவராலும் அக்காலத்தியற்றப் பட்டன?

இக்காலத்தில் 'யாரும் பாடுபுகழ் ஆறுமுகநாவலர்" இருள் நீக்கி ஒளியளிக்க வல்ல ஒரு கதிரவன்போற் றோன்றினார். மடற்பனைகள் நிரம்பியவூரில் தென்னை மரமும், ஆலமரமும்போல வந்து பயனளித்த பெரியாராகிய இவர் 1822ம் ஆண்டில் யாழ்பாணத்து நல்லூரில் கந்தப்பிள்ளை சிவகாமியம்மையார் இவர்களுக்குப் புதல்வராகத் தோன்றினார். தோன்றிய இவர் நல்ல பரம்பரையில் வந்தவர்; சிவஞானசித்தியாருக்கு ஒரு நல்லுரை இயற்றிய ஞானப்பிரகாசர் மரபில் வந்த இவர், கையில் எழுத்தாணியுஞ் சட்டமுங் கொண்டே ஒரு தமிழ் நாடகத்தையெழுதியக்காலே துஞ்சிய ஒருவரது புதல்வராகப் பிறந்த இவர், புராணப் பிரசங்கங்கட்கெல்லாம் இவரது சிறுவயதில் அழைத்துச் சென்ற மயில்வாகனனாரை மைத்துனராகப் பெற்றிருந்த இவர், சேனாதிராயர் சரவணமுத்துப் புலவர் ஆகிய பெரியார்களை ஆசிரியராகப் பெற்றிருந்த இவர், பிற்காலத்திற் பெருமையும் பீடுமுற்றது வியப்பன்று. ஓய்வு நேரங்களை யெல்லாம் வீணே கழிக்காது குடியில்லாத் தனியிடங்கள் கண்டு ஆங்குச் சென்று புத்தகங்களைப் படிப்பதில் பயன்படுத்திய இவர், உரைக்கப்படும் பொருளை உளத்தமைத்தும் மாணவர் கொள்ளு மாற்றலறிந்து அதற்கேற்பப் பலரைக் கல்வி பயிற்றுவித்த இவர், தம் மாணவரில் ஒருவர் வைசூரி நோயால் வருந்திய பொழுது அவரை இவர் போய்ப் பார்க்கக் கூடாதென்று பலர் ஒருபால் வற்புறுத்திச் சொல்லவும் கேளாது அவர் இருந்த இடஞ்சென்று அவரைக் கண்டு பேசி இருந்து ஆவன புரிந்து வந்தமையால் மாணவர்பால் இருந்த அன்பினைப் புலப்படுத்திய இவர் சிதம்பரத்திலும், யாழ்ப்பாண வண்ணார்பண்ணையிலும் பள்ளிக் கூடங்களையமைத்துப் பலருக்கு அறிவு புகட்டி வந்த இவர், பின்னாளிற் பெரிய பிரசங்கியராகவும் பதிப்பாளராகவும் உரையாசிரியராகவும் ஆனது வியப்பன்று, 'வார்த்தை நூறாயிரத்தொருவர்" என்பதில் நம்பிக்கை கொண்டு சிலசொல்லியுஞ் சொல்ல, மக்கள் நிறைந்திருந்த காலத்தில் எடுத்துக் கொண்ட ஒரு பொருள் பற்றித் தொடுத்துப் பலமணிநேரம் ஆடாமல் அசையாமல் இருந்து பிரசங்கிக்கும் ஆற்றல் படைத்தவர் இவர். 'ஆயத்தமில்லை", 'சைவசமயமே சமயம்" என்ற தலைப்புகளின் கீழே இவர் செய்த பிரசங்கங்கள் மிகச் சிறந்ததெனக் கூறுவர். நன்னூல் விருத்தியுரை, திருக்குறள், பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக்கொத்து ஆகியவற்றைப் பிழையறப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்த வள்ளலார் இவர். நன்னூற் காண்டிகையுரை கோயிற்புராணவுரை, சிவதருமோத்திரவுரை, ஆகியவற்றை இயற்றிப் புகழைத் தமதாக் கிக் கொண்டவர் இவர். வசனநடை கைவந்த வல்லாளர் என திரு.வீ. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களாற் பாராட்டப்பட்ட பெருமையையுடையவர் இவர். பாலபாடங்கள், சைவ வினாவிடை, திருவிளையாடல் புராண வசனம், பெரிய புராண வசனம் ஆகியவற்றையெழுதித் தமிழ்மக்கள் வசன நடையெழுதப் பயில்வதற்கு அடிகோலியவர் இவர். இவர் எழுதிய பாலபாடங்களை வசனநடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக்கொள்ளத்தக்க நடைவண்டியென்று சொல்லலா மென்றும், பெரிய புராண வசனத்தை வசனமுங் கதையுமெழுத முற்படும் பெரியார்களும் விரும்பி நோக்கதக்க வழி காட்டியென்றியம்பலாமென்றும் திருமணம் செல்வக்கேசவராய முதலியார் கூறுவர். தமிழ் வசனநடைச் சரித்திரத்தில் இவருக்கு என்று மழியாப் பேரிட முண்டு.

தமிழ்க் கவிகளிற் பயின்ற இவர் கவிஞராக விராது

(14ம் பக்கம் பார்க்க)

# நான்கேட்டபடி நல்லை நாவலர்

- மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் -

## நாவலர் சொல் விளக்கம்;

தமிழ்ப் புலவர்களில் கவி, கமகன், வாதி, வாக்கியென நான்கு வகையினர் உண்டு. எந்தச் சமயத்திலும் கொடுத்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசும் ஆற்றலுடையவரை வாக்கியென்று சொல்வார்கள். 'வாக்வி" என்ற வடசொல்லின் திரிபே அது. அதனையே நாவலர் என்று தமிழிற் கூறலாம். பண்டைக் காலத்தில் கவிபாடும் ஆற்றலுடையாரையும் நாவலர் என்று வழங்கினர். இக்காலத்தில் நல்ல பிரசங்க சக்தி வாய்ந்தவர்களை நாவலரென்றும் சொல்வதிற் பிழையொன்றுமில்லை.

## நாவலருள் நாவலர்

தமிழ் நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப்பினும் நாவலரென்று கூறிய மாத்திரத்தில் அச்சொல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையே குறிக்கும். இதற்குக் காரணம் அவர் நாவலர்களுக்குள் சிறந்தவராக விளங்கியமையேயாகும்.

## கண்டதில்லை கேட்ட துண்டு

நாவலரை நான் பார்த்துப் பழகுவதற்குரிய சமயம் நேர்ந்ததில்லை. ஆயினும் அவரோடு பழகியவர்களிட மிருந்தும் அவரைப் பற்றிப் பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றைக்கொண்டு என் அகக்கண்ணில் ஓர் உருவத்தை அமைத்துப் பார்ப்பது என் வழக்கம்.

## சைவமுந் தமிழும் ஓங்க

அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது வாழ்க்கை நெறி என் உள்ளத்தைக் கவரும். கல்வியறிவு மிகச் சிறந்ததே. ஆயினும் அவ்வறிவு ஒழுக்கத்தோடு இயையும்போது அதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டாகின்றது.

நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும் பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையும் யாழ்ப்பாணத்திலமைந்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாஷிகளாகும்.

## பிரசங்க வன்மை

அவருடைய பிரசங்க சக்தி அவருக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று. நாவலரென்னும் பெயரும் அதனாலே வந்தது போலும் "வார்த்தை பதினாயிரத் தொருவர்" என்பது ஒரு தமிழ்ச் செய்யுட்பகுதி. 'படைகளோடு சென்று போர்புரிந்து சாவார் எளியர். சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர்" என்று திருவள்ளுவரும் கூறினார். அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்திலே நன்கு அமைந்திருந்தது.

அக்காலத்துக்கு முன்பு பெரும்பாலும் புராணப் பிரசங்கங்களும் வாதங்களுமே சபைகளில் நடைபெற்றுவந்தன. பொதுவாக ஒரு விஷயத்தை மேற்கொண்டு முறைப்படுத்திக் காரண காரியங்களைக் காட்டி ஆக்ஷேப சமாதானங்களோடு பேசும் வழக்கம் தமிழ்நாட்டில் மிகக்குறைவாக இருந்தது. கிறிஸ்தவ சமயப் பாதிரிமார் செய்த உபந்நியாசங்களின் முறை தெளிவாகவும் எளிதிலே யாவரும் அறிந்து சுவைப்பதற்குரியதாகவும் இருந்தது. அந்த முறையை நாவலர் பயின்று அதிற் பேராற்றல் அடைந்தார்.

## சீர்திருத்தச் செம்மல்

பிறரிடம் குறைகாணின் கண்டிப்பது நாவலர் இயல்பு. பொது நிலையங்களிலும் தர்ம ஸ்தாபனங்களிலும் நிகழும் தவறுகளை யாருக்கும் அஞ்சாது வெளியிட்டார். அவர் எழுதிய கண்டனப் பத்திரங்கள் பலவற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு ஸ்தாபனமும் நெறிபிறழாமல் நடைபெற்று வரவேண்டும் என்பதில் அவருக்கு இருந்த ஊக்கம் புலப்படும்.

## ஆயகலைகள்

நாவலர் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் உயர்வும் கல்விப் பெருமையும் சைவசீலத்தின் சிறப்பும் கமழ்ந்தன. அவர் சமயத் தொண்டராகவும் நாவன்மை மிக்கவராகவும் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கினார்.

## மகாவித்துவான் பாராட்டு

என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவலருடைய குணாதிசயங்களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

## புகழ் நிலைபெறும்

இப்பொழுது தமிழ் நாட்டினருக்குத் தமிழினிடத்தில் அன்பு வளர்ச்சி பெற்றுவருகின்றது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒரு காரணம் ஆவார். அவர் என்றும் தமிழ் நாட்டினரது நினைவில் இருப்பவராதலின் அவருடைய புகழுடம்பு என்றும் மறைதலின்றி நிலவி வரும் என்பதில் ஐயமில்லை

நன்றி: நாவலர் நினைவு மலர் - 1938

## செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்த்

# திருப்பெருந்துறை மன்னன்

திருவாசகம் அருளிச் செய்யப்பட்ட தலங்கள் ஏழு. திருப்பெருந்துறை (20 பதிகங்கள்), சிதம்பரம் எனும் தில்லை (25 பதிகங்கள்), திருவுத்தரகோசமங்கை (நீத்தல் விண்ணப்பம்), திருவண்ணாமலை (திருவெம்பாவை, திருவம்மானை), திருக்கழுக்குன்றம் (கழுக்குன்றப் பதிகம்), சீகாழி எனப்படும் திருத்தோணிபுரம் (பிடித்த பத்து), திருவாரூர் (திருப்புலம்பல்) ஆகியவையே அவை. இவையன்றித் திருவாசகத்தில் வேறு 37 தலங்களும் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில தேவாரப்பாடல் பெற்ற தலங்கள். ஏனையவற்றுள் பல பெயர்கள் எவ்வெத்தலங்களைக் குறிக்கின்றன என்பதைச் சரியாக அறிய முடியவில்லை. திருவாசகம் அருளிச் செய்யப்பட்ட ஏழுதலங்களுள் திருப்பெருந்துறை, திருவுத்தரகோச மங்கை ஆகியவிரு தலங்களும் ஈழத்திலிருந்து தமிழக யாத்திரை செல்பவர்கள் மத்தியில் அதிக பிரபல்யம் பெறாமைக்கு அவை தமிழகப் பெருநகரங்களுக்கு சமீபமாக அமையாதமை காரணமாகவிருக்கலாம். இவையிரண்டும் மார்கழித் திருவெம்பாவை காலங்களில் சென்று கண்டுதொழ வேண்டிய அருமையான சிவத்தலங்கள்.

திருவாசக பாராயணத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் மார்கழி மாதம் அண்மிக்கும் இச் சமயத்தில் இவ்விரு திருத்தலங்களையும் பற்றிய தகவல்களைத் தொகுத்தளிக்கிறோம். ஆவுடையார் கோவில் என வழங்கப்படும் திருப்பெருந் துறை பற்றிய கட்டுரை இவ்விதழை அலங்கரிக்கிறது. திருவுத்தரகோசமங்கை பற்றிய கட்டுரை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

–ஆசிரியர்.

ஆவுடையார் கோவில் எனப்படும் திருப்பெருந்துறை சிவாலயங் களுள் தனித்துவமானது. இது மாணிக்கவாசகப் பெருமானுக்கு குருந்தம் மேவிய குருபரனாக வந்து அருளிய தலமாதலால், இங்கு தெட்சணாமூர்த்தி சந்நிதி இல்லை. இத்திருக்கோயில் தெற்கு நோக்கி யுள்ளது. (சிவாலயங்கள் பெரும் பாலும் கிழக்கு நோக்கியிருக்கும் ; சில மேற்கு நோக்கியிருக்கும்). சிவபெருமான் குருவாக வந்து உபதேசித்த தலமாதலால் கொடி மரம், பலிபீடம், நந்தி என்பனவும் இல்லை. கர்ப்பக்கிரகத்தில் (மூலஸ்தானத்தில்) ஏனைய சிவா லயங்களில் போல சிவபெருமான் அருவுருவத் திருமேனியான சிவலிங்கமாகப் பாணவடிவில் காட்சி தருவதில்லை. குருந்தம் மேவிய குரபரனான ஆத்மநாதர் அருவமாகவே(உருவமற்று) இங்கு எழுந்தருளியுள்ளார். கருவறை யில் ஆவுடையார் (நம்மை ஆளு டையார்) மட்டுமே சதுரவடிவப் பீடமாகக் காட்சியளிக்கிறது .மேலே சிவலிங்க பாணமில்லை.கோபுர வாயிலில் நிற்கும் போதே எதுவித தடங்கலுமின்றிக் கருவறை தெரி கிறது.

ஆத்மநாதசுவாமியைப் போலவே ஸ்ரீயோகாம்பாள் என நாமம் தாங் கிய அம்பாளின் சந்நிதியிலும் திரு மேனி இல்லை. அதாவது அம் பாளும் அருவம் தான். நூறு இதழ் கள் கொண்ட தாமரையாகிய பீடத் தில் (சததள பத்ம பீடம்) யோகாம் பாளின் திருவடிகள் மட்டுமே தங்கத்தாலான யந்திர வடிவமாக உள்ளது.

இவ்வாறான பல சிறப்புகள் பொருந்திய இத் திருவாசகத் தலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந் தாங்கிக்குப் பக்கத்தில் உள்ளது. அறந்தாங்கி - மீமிசல் பாதையில் அறந்தாங்கியிலிருந்து 14 கி.மீ தொலைவில் உள் ளது. திருச்சியி லிருந்து புதுக்கோட்டை அறந் தாங்கி வழியாகவும், தஞ்சை யிலிருந்து பட்டுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், மது ரையிலிருந்து திருப்பத்தூர் காரைக்குடி அறந்தாங்கி வழியாக வும் இத்தலத்திற்கு செல்லலாம். மக்கள் வழக்கில் இன்று இத்தலம் ஆவுடையார் கோயில் என வழங் குகின்றது. கோயிற் பெயரான ஆவுடையார் கோயில் என்பதே ஊருக்கும் பெயராக வழங்கு கிறது. சிறிய ஊர். அருகில் செல்லும்போதே கோபுரம் காட்சி யளிக்கின்றது. அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்த வாதவூரர், கீழ் கடற் கரைக்குக் குதிரைவாங்கச் சென்ற போது அவரைக் குருந்தமரத்தின் கீழிருந்து குருவடிவில் இறைவன் ஆட்கொண்டு, அவரை மாணிக் கவாசகராக ஆக்கிய மாட்சிமை பெற்ற தலம். மாணிக்கவாசகர் அருள்பெற்ற புண்ணிய பூமி. அருபரத்து ஒருவன் குருபரனாக வந்து காட்சி தந்த பதி. இத்திருக் கோயில், ஆதியில் இறைவனின் கட்டளைப்படி மாணிக்கவாசகரால் கட்டப்பட்டது. பின் பலராலும் திருப் பணிகள் செய்விக்கப்பட்டது. திரு வாவடுதுறை ஆதீனத்தின் அருளா ட்சிக்குட்பட்டது. ஆதீனக்கட்டளைத் தம்பிரான் ஒருவர் இங்கிருந்து கோயிலைக் கவனித்து வருகிறார்.

இறைவன் - ஆத்மநாதசுவாமி. குருசுவாமி. பரமசுவாமி ஆத்மநாதர்.

இறைவி - யோகாம்பாள்

தலமரம் - குருந்த மரம்

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம் (திருத்தமாம் பொய்கை)

உலகவுயிர்கள் வீடுபேறு பெறுவ தற்குச் சாதனமாகப் பிறவிக் கடலி லிருந்து கரையேறுவதற்குத் துணையாக - பெரும் துறையாக- விளங்கும் தலம் ஆதலின் பெருந் துறை எனப்பெயர் பெற்றது. வெள்ளாறு (சுவேதநதி) பாய்கின்ற வயற்பரப்புக்கள் நிறைந்த பகுதி. "தெள்ளுநீர் வெள்ளாறு பாய், திருமிழலைநாட்டுப் பெருந்துறை என்பது சிவலோகநாயகி பொன் னூசலில் வருந்தொடர்.

திருவாசகத்திலுள்ள 51 பகுதிகளுள் சிவபுராணம், திருச் சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத் திலாப்பத்து, அடைக்கலப் பத்து, ஆசைப்பத்து, அதிசயப் பத்து.

(10ம் பக்கம் பார்க்க)

# திருவருட்பயன் தொகுப்புரை

சித்தாந்த சிகாமணி க.வச்சிரவேல் முதலியார்

**மூன்றாம் அதிகாரம்: இருள் மல நிலை**

பிறவியால் வரும் துன்பங்களும், அதற்குக் காரணமும், பிறவிப் பிணி நீங்கியபின் எய்தும் பேரின்பமும், அதற்குத் துணையாக நிற்கும் பொருளாகிய திருவருளும் ஆராய்ச்சி அறிவால் உள்பொருள்கள் என்று தெளியப் படும். இவற்றினது உண்மை மக்கள் அறிவுக்குப் புலப்படாமைக்குக் காரணம் இருள் போன்றதாகிய ஆணவமலத்தின் பிணிப்பேயாகும். இருள் புறத்தேயுள்ள பலவகைப் பொருள்களையும் வேறுபாடு தோன்றாதபடி மறைத்துத் தன்னையே காட்டி நிற்கும்; அதுபோல, ஆணவமும் உயிரையும் கடவுளையும் மறுபிறப்பையும் இருவினைகளையும் தோன்றாதபடி அகத்தேயுள்ள அறிவொளியை மறைக்கும். புறவிருள் பிறபொருள்களைக் காணவிடாது மறைக்குமேயன்றித் தன்னை மறைப்பதில்லை. ஆதலால் இருள் உள்ளபோது அதைப் போக்க வழி தேடுகிறோம். ஆனால் அகவிருள்தான் உயிரோடு கூடியிருப்பதைக்கூடக் காட்டுவதில்லை; அதனால்தான் மக்கள் தங்கள் அறியாமையைப் போக்கிக் கொள்ள நினைப்பதில்லை.

ஆணவம் உயிர்களை அநாதியாகவே பற்றி உள்ளது. திருவருளும் உயிர்க்குயிராய் இருப்பினும், இவ்வாணவ இருள் திருவருளைப் பற்ற முடியாது உயிரின் அறிவை மட்டும் பற்றி நிற்கும். அப்படிப் பற்றி நின்று, அவ்வறிவு திருவருளை உணராதபடி தடைசெய்து வருகின்றது. ஆணவமலம் ஒன்றேயாயினும், எண்ணிறந்த உயிர்களை எல்லாம் கூடி மயக்கும் ஆற்றல் வாய்ந்தது. அறியுந் தன்மை உள்ள உயிர்கள் அறிவித்தால் அன்றி அறியாதபடி செய்வதே ஆணவத்தின் செயல் எனச் சுருங்கக் கூறலாம். இது துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணமாம்; இதை உயிரின் குணம் எனக்கொள்ளுதல் தவறு; குணமாயின், அறியாமையை நீக்கும் போது உயிரும் அழிந்து போம்; பேரின்பநிலை என்பது ஒன்று இல்லையாய் முடியும். எனவே ஆணவத்தை உயிரின் குணம் என்றல் பொருந்தாது.

பிறப்பு நிலையில் இத்தகைய ஆணவம் மேம்பட்டு இருப்பினும் உயிர் பக்குவ முதிர்ச்சி வரும்போது ஒளியாகிய திருவருளைக் கவரும்; அஞ்ஞான்று ஆணவம் தன்வலி முழுவதும் கெட்டு அகலும்.

பிறப்பு நிலை இரவு போன்றது; திருவருளைப் பெற்றின்புறும் நிலை சூரியன் உதிக்கப் பெற்ற பகற் காலத்தைப் போன்றது. இருள் நீங்கும் வரையும் அதனை ஓரளவு நீக்கி உதவும் விளக்கினைப் போல, உயிர் திருவருளைப் பெறும்வரை மாயையானது வினைக்கீடாகத் தனு கரண புவன போகங்களைத் தந்து சிற்றறிவை விளக்கி நிற்கும். ஆணவமும் மாயையும் இருளும் ஒளியும் போல் இகலி நிற்பன. சிவஞானத்தின் முன் இரண்டன் வலிகளும் கெடும்.

**நான்காம் அதிகாரம்: அருளது நிலை**

இம்மை மறுமைகளில் இன்பத்துக்குக் காரணமாக உள்ளவற்றில் திருவருளைப் போல் தலையாய பொருள் வேறில்லை. அஃது உயிர்கள் வினைகளை ஈட்டுவதற்கும் அவற்றின் பயனை நுகர்வதற்கும் உதவி செய்வதாய்ப் பேரொளியாய் உள்ளது. உயிர்கள் தத்துவங்களால் ஆகிய உடம்போடு கூடியே எதையும் அறியும்; அவற்றை அத்தத்துவங்களைக் கூடும்படி செய்து அறிவை விளக்குவது திருவருளே. உயிர்களுக்கு வாழ் இடமாக உள்ளதும் திருவருளே ஆயினும் அவை திருவருளை அறிந்து அனுபவிப்பதில்லை, திருவருளை ஆதாரமாகக் கொண்டுள்ள மாயையின் காரியமாகிய பொருள்களையே அறிந்து பற்றி மயக்கத்தில் ஆழும். இது பாற்கடலில் வாழும் மீன் அப்பாலை உண்ணாது அங்கு மிதக்கும் சிறு பூச்சிகளை நுகரக் கருதுவதை ஒக்கும். உறியில் உள்ள பாற் குடத்தின் மேல் உள்ள பூனை பாலை உண்ணக் கருதாமல் சுவரில் ஓடும் கரப்பை என்னும் சிறு பிராணியை உண்ண முயல்வதனையும் இதற்கு ஒப்பிடலாம். திருவருளின் உண்மையை உணராதிருத்தல் நிலத்தை உணராது அதன்மேல் நடத்தலையும், மலையும் விண்ணும் இருந்தும் அவற்றைக் கருதாமையும் போன்றது.

திருவருள், வழிப்போக்கனுக்குப் பின்வரும் துணைவனைப் போல, நம் உணர்வுக்கு உணர்வாய் உடன் நின்று உதவுவது. பகலில் சூரியனது ஒளி போலவும், ஆற்றைக் கடப்போனுக்கு அவ்வாற்றில் உள்ள நீர் போலவும் திருவருள் நம்மை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து இருப்பினும் சஞ்சலப்படும் மனத்தால் அதனைக் கருதாமல் இருக்கின்கிறோம். அதனைச் சிந்தித்து உணர்ந்தாலன்றி உயிர்களுக்கு உறுதி என்பதில்லை.

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

# சேர் பொன் இராமநாதன் - ஒரு உண்மைச் சமயி

சேர் பொன் இராமநாதனின் சர்வகலாவல்லமை எவரையும் பிரமிக்க வைக்கும். இராஜதந்திரி, செயல் வீரன், சமயஞானி, கல்விமான், சட்டசபை உறுப்பினர், சட்ட நிபுணர், தத்துவஞானி, நாட்டுப் பற்றாளன், உலோகோபகாரி, வாதத் திறமையாளன், வாக்கி, (வாக்கு வன்மையுள்ளவர்), எழுத்தாளன், நிர்வாகி, கல்வி சீர்திருத்தவாதி, கொடை வள்ளல் போன்ற பெருமைகளைப் பெற்ற இராமநாதன், மனிதனொருவன் தனது வாழ்வில் ஈடுபடக்கூடிய துறைகளில் அநேகமானவற்றில் ஈடுபட்டுப் பெரு வெற்றி கண்டவர்.

இராமநாதனின் பிரமிக்க வைக்கும் இச் சகலகலாவல்லமை, அவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்ததாகிய, வாழ்க்கையின் முழுப் பரிமாணத்தையும் கவனமாக ஆராயவேண்டும். அவற்றில் சாதனை புரியவேண்டும், வெவ்வேறு பொருத்தமான நிலைகளிலிருந்தெல்லாம் வாழ்வை நோக்க வேண்டும், அதன் மூலம் மனித சமுதாயத்திற்குப் பல்வேறுபட்ட துறைகளில் பணியாற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வுகளின் வெளிப்பாடாகும்.

இராமநாதனின் இவ்வுள்ளுணர்வுகளை - உள்ளுந்துதல்களை - அபிலாஷைகளை - நனவாக்குவதற்கு இன்றியமையாதனவான சுறுசுறுப்பு, எதையும் தாங்கும் இதயம், சக்தி, பலம், சகிப்புத்தன்மை, பொறுமை, நெகிழ்ச்சி ஆகிய குணவியல்புகளும் அவருக்கு இறைவனால் அருளப்பட்ட கொடைகளாக அமைந்திருந்தன. தினமும் பதினெட்டு மணித்தியாலங்களுக்கு மேல் அவர் சுறுசுறுப்புடனும் உறுதியுடனும் தமது செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கக் காணப்பட்டதாக அவருடன் பணியாற்றியவர்கள் கூறியுள்ளனர்.

இக்கொடைகளுடன் பிறந்த இராமநாதன் தனது செயற்பாடுகளுக்கு இன்றியமையாத ஆத்ம சக்தியையும் உள்ளுணர்வையும் தியானம் மூலமும் பரமேஸ்வரன் மேற்கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கை மூலமும் பெற்றுக் கொண்டார். அவரது நாளாந்த அடிப்படைச் செயற்பாடுகளுள் தியானம் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. ஆதிகால ரிஷிகள் போல, தமது அறைக்கதவுகளை மூடிவிட்டுப் பல மணிநேரம் தியானத்திலிருப்பார். அவருடைய மாணவரொருவர், மூடிய கதவினுள்ளே இராமநாதர் என்ன செய்கிறார் என்பதை அறிய வேண்டுமென்ற அறிவு உந்துதலால் கதவிலுள்ள திறப்புத் துவாரத்தினூடாக இரகசியமாக நோக்கியபோது கண்ட காட்சி தனது மனதில் எத்துணை பயபக்தியை ஏற்படுத்தியது என்பதை எழுதி வைத்துள்ளார். கால்களை மடித்து சப்பாணம் கொட்டி இருந்து உடம்பை நேராக வைத்துக்கொண்டு ஆடாது அசையாது கண்களை மூடிக் கொண்டு வெளியுலகத்தை மறந்த நிலையில்- சுற்றாடலெங்கும் ஆழ்ந்த அமைதியும் சாந்தமும் வியாபித்து நிற்க தம்மைப் பரமாத்மாவுடன் பிரறிய முடியாததும் மிகநெருக்கமானதுமான கூட்டுறவில் ஈடுபடுத்திப் பல மணிநேரம் தியானத்திலிருப்பது இராமநாதரின் நாளாந்த செயற்பாடாகவிருந்தது. இவ்வாறான வேளைகளில் அவர் பேரானந்தத்தை அனுபவித்தார். அந்த ஆனந்த அனுபவத்திலிருந்தே அவர் தமது பலத்தை ஆத்மசக்தியை - ஆத்ம உணர்வைப் பெற்றுக் கொண்டார்.

சமயமே அவரது வாழ்க்கையின் பிரதான உந்து சக்தியாகவும் அவரது செயற்பாடுகளுக்கும் நடத்தைகளுக்கும் பிரதான ஊற்றாகவும் அமைந்திருந்தன. சமயவுணர்வுடைய உண்மைச் சமயிகள் இறைவனிடம் பூரணமாக சரணாகதியடைந்த நிலையில், பற்றற்று அர்ப்பணிப்புடன் தமது கடமைகளைச் செய்வர். தாம் இறைவனது வேலையைச் செய்வதற்காகவும் குறித்த சில கடமைகளை நிறைவேற்றவும் இறைவனால் படைக்கப்பட்ட, இறைவனது கருவியாகவே தம்மைக் கருதுவர். இதுவே உண்மைச் சமயிக்கு ஆத்மசக்தியையும் ஞானத்தையும் அளிக்கிறது. இத்தாற்பரியத்துடன் வாழ்ந்ததாலேயே சேர். பொன் இராமநாதன் அவர்களால் பெருஞ்சாதனைகளைப் புரியக் கூடியதாயிருந்தது. சேர். பொன் இராமநாதன் ஒரு கர்மயோகி; மகா பக்தன். இராமநாதனின் வாழ்வில் தற்பரானந்தசுவாமிகள் ஏற்படுத்திய தாக்கத்தை முன்னோர் கட்டுரையில் (இந்துசாதனம்புத்தகம் 111,இதழ் 8) எடுத்துக் காட்டியிருந்தோம்.

தனிமையிலிருக்கும் போதும் களைத்து ஆயாசமாக விருக்கும் போதும், தனித்து உலாவச் செல்லும் போதும், தனது மென்மையானதும் இனிமையானதுமான குரலில் இராமநாதன் அவர்கள் திருமுறைப் பாடல்களை உள்ளுணர்வு மேலிட மனவெழுச்சியுடன் இருகண்களிலிருந்தும் கன்னங்கள் வழியே நீர் தாரையாக வழிந்தோடப்பாடுவது, அதைக் கேட்போரை உளம்நெகிழ வைத்ததாக அறியக் கிடக்கிறது.

மக்கள் கூடியிருக்கும் மண்டபங்களிலும் ஆலய சுற்றுப் பிரகாரங்களிலும், கூட்டு வழிபாட்டிலும் சலிப்படையாது பாடுவது இராமநாதர் வழமை. அப்போது அவரது ஒவ்வொரு நரம்பும் நாரும் தெய்வீக இன்ப வெள்ளத்துள்திளைத்து மாறிலா மகிழ்ச்சியுள் மலரும். அதன்பின்னர் அப்பாடலுக்கான விளக்கத்தை அளிப்பார். அவ்விவரிப்பு பல மணித்தியாலங்களுக்குக் கூட நீடிக்கும். பாடலில் பொதிந்து கிடக்கும் ஆழமான ஆன்மீக தத்துவ உண்மைகளைத் தெளிவுபடுத்துவதாக அவ்வுரையிருக்கும்.

ஒரு சமயம் சந்நியாசியொருவர், இராமநாதரது ஆடம்பரமான மாளிகை, அதன் பரந்த பசும்புற்றரை, அலங்கார விரிப்புகள், விலைமதிப்பற்ற பொருட்கள் ஆகியவற்றைப் பார்த்து இவையெல்லாம் யாருடையன எனக் கேட்டாராம். அதற்கு இராமநாதரிடமிருந்து எதுவித தயக்கமுமின்றி வந்த விடை "**பரமேஸ்வரனுடையது**".இதுவன்றோ உண்மைச் சமயியின் உளப்பாங்கு!

# 'தென்னாடுடைய சிவனே போற்றி'

மாணிக்கவாசக சுவாமிகள் சித்தந் தெளிந்து சிவமானவர். 'சித்தமல மறுவித்துச் சிவமாக்கித், தமை யாண்ட அத்தன் பெருங்கருனைக்கே பரிந்து பரிந்துருகியவர். தம்மின் வேறாகாது நின்று தம்மை உருக்கிக் குழைவித்த சிவத்தின் பரத்துவ உண்மைகளை அவர் வெளியிட்டு வைத்த மணிவாசகத் தொடர்கள் திருவாசகத்திற் பலப்பல. அவற்றுள் மேலதும் ஒன்று.

இம் மணிவாசகத்தில் சிவனை அவர் உணர வைத்த பாங்கினும் மகத்தானது நாட்டை அவர் உணரவைத்திருக்கும் பாங்கு.

சிவனே சர்வலோக ஏக நாயகன் என்ற பொதுநிலை உண்மையை அவர் மறைக்கவில்லை. 'எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி" என அதனை அவரே வெளிப்படுத்துகின்றார். ஆனால் அதனையும் முந்திக் கொண்டு அவர் வாக்கில் வெளிவந்திருக்கின்றது இச்சிறப்பு நிலை உண்மை.

நாடுகள் பலவேறிருப்பதும் உண்மைதான்: அவ்வந்நாட்டார் எல்லோரையும் அவரவரியல்புக் கேற்ற வண்ணம் சிவன் பரிபாலிப்பதும் உண்மைதான். அவ்வந்நாட்டார் தத்தம் கன்மானுபவ நிலைக்கு அனுகுணமாம் வகையில் தமக்கு நிகழும் அறிவாசாரத் தரத்திற்கேற்ப பெயர் வேறுபட்ட சமயக் கோட்பாடுகளின் வழி நின்று பெயர் வேறுபட்டுக் குணங் குறிகளும் வேறுபட்ட தெய்வங்களின் சார்பில் வழிபாடாற்றி வருவதும் உண்மைதான். அவரவர் வழிபாடு அவரவர் ஆசாரத்திற்கு ஏற்குமளவு உண்மை வழிபாடாம் பட்சத்தில் அவரவர் தெய்வங்களினிடமாக நின்று சிவன் அவரவர்க்காக வேண்டும் பலனளிப்பதும் உண்மைதான் . ஆனால், தன் நிலவளம் பொருள் வளம் அறிவுவளம் எல்லாம் ஒரு சேரச் சிவன் பெயருக்கே அர்ப்பணித்து விட்ட நாடு உலகில் எந்தநாடு? தனிப்பட்ட எவர் பேருக்கும் இல்லாத அளவு நிலப்பரப்புகளும் பொருட் குவியல்களும் சிவனுக்கே அர்ப்பணித்திருக்கும் நாடு உலகில் எந்தநாடு? இயற்கை ஏதுக்களால் எள்ளளவுஞ் சிதைக்கப்படாத வகையில் ஸ்திரமானவையும், சிற்பத்தொழில் நுட்பச் சிறப்புகளும் சித்திர வேலை வனப்புகளும் வாய்ந்து பல ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிப் பிரமாண்டமான கூடங்கள் கோபுரங்களோடு பொலியும் இராமேஸ்வரம், சிதம்பரம், திருவாரூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவானைக்கா மதுரைக் கோயில்கள் போன்றவற்றைச் சிவனுக்கென்றே ஆக்கி அர்பணித்திருக்கும் நாடு உலகில் எந்தநாடு, அரசின் களஞ்சியத்தில் இருக்கக் கூடுமளவுக்குப் பல மடங்கு அதிகமான தங்கம், வெள்ளி, வைரம் முதலான அரும் பொருள்களைக் கோயில் மூர்த்திகள் ஆபரணங்கள், தண்டிகை, பல்லக்கு, தேர், வாகனம், விமானம், கலசங்கள் ஆகியவற்றின் பொருட்டு ஒதுக்கியிருக்கும் நாடு உலகில் எந்த நாடு? கல்லைப் பிசைந்து கனியாக்கிய கதையாக,வன்மலைகளைக் குடைந்து "திருசிராபுரம்' திருப்பரங்குன்றம் போன்ற சிற்பக் கோயில்களைச் சிவனுக்கென்றே செதுக்கி வைத்த நாடு எந்த நாடு? சித்தாந்த விளக்க ரீதியான ஆன்மீகப் பேற்றினை மக்கள் எய்துதற்குச் சாதனங்களாகும் வகையில் ஆலய நித்திய, நைமித்திகக் கிரியை வழிபாட்டு முறைகளைச் சிவவழிபாட்டின் பேரில் அமைத்து வைத்திருக்கும் நாடு எந்த நாடு? வேத உண்மைகளைப் பொதுவாகவும் சிவாகம உண்மைகளைச் சிறப்பாகவும் தழுவி வேதாகம சைவ சித்தாந்த நிர்ணயம் பண்ணி வைத்த நாடு எந்த நாடு? அறிவறியாப் பாமரரும் தம் அன்பிருந்தவாற்றுக்கு அளவாகப் பாடி ஆத்மிகத் திருப்தியுறுவதற்கான அருட்பாடல்களைப் பல்லாயிரக் கணக்கிற் படைத்து வைத்த நாடு எந்த நாடு? காடு மேடுகளிற் கல்லெனக் கண்டதெல்லாம் காளியும், துர்க்கையும், கணபதியும், முருகனும், தாண்டவ மூர்த்தியும் தக்ஷிணாமூர்த்தியுமாகச் செதுக்கிச் சிவ மகிமை பேணி வைத்த நாடு உலகில் எந்தநாடு?

இந்த இந்த வகையிலெல்லாம் சிவனை ஏகபோகமாகத் தன்னுடைமையாக்கிக் கொண்டுள்ள நாடு தென்னாடு, இன்றைய நம் புறக்கண்ணிற் காட்சி யளிக்கும் இத்தனையும் இன்னும் அதிகமானவையும் அன்றைய மாணிக்கவாசகரின் அகக் கண்ணுக்கு விருந்தாயிருந்திருக்கின்றன. சிவமகிமையோடு நாட்டு மகிமையும் சிவப்பற்றோடு தேசப் பற்றும் ஒருகைப்பட்ட வெளிவந்திருக்கின்றது 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற மணிவாசகத் தொடர்.

நமது மற்றும் சமயாசாரியர்கள் விஷயத்திற் போலவே தேசப்பற்றும், மொழிப்பற்றும், மாணிக்கவாசகரின் சிவப்பற்றில் அபின்னமானவை. சிவனைத் தென்னன். தென்னன் பெருந்துறையான். 'தண் பாண்டி நாட்டான்' என்றும் பாண்டி நாட்டைத் 'தமிழளிக்குந் தண்பாண்டி நாடு' என்றும் தமிழைத் தண்ணார் தமிழ். தில்லைச்சிற்றம் பலத்துமென் சிற்தையுள்ளும் உறைவான் உயர்மதிற் கூட வினாய்ந்த தண் தீந்தமிழ்' என்றும் பிறவாறும் அவர் போற்றியிருத்தல் குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழராகிய நம்மவர்க்குத் தேசப்பற்றும் மொழிப்பற்றும் உள்ளவை தானே என்பது வேறு. இந்தத் தேசம் சிவனை உடைமையாகக் கொண்ட தேசம்; எங்கள் தமிழ் சிவம் பயிலுந் தமிழ் என்ற உணர்விலாம் தேசப்பற்றும் மொழிப்பற்றும் வேறு தரத்திலும் தன்மையிலும் இது வேறு. இவ்வகைப்பற்றின் பிடிமானத்துக்கு மாணிக்கவாசகர் திருவாசகம் மலையிலக்காகும்.

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சித்திரபானு ௵ கார்த்திகை ௴ 03 ௳ (19.11.2002)

# அவதார புருடர்கள்

உலகில் தருமம் குன்றி, அதர்மம் மேலோங்கி, மக்கள் தகுந்த தலைமையின்றி அல்லல் படும் போது அவர்கள் வாழ்வைச் செழுமைப்படுத்தி வழிகாட்டவல்ல அவதார புருடர்கள் தோன்றுவது சரித்திரம்கண்ட உண்மை.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நமது நாடு சகல துறைகளிலும் கீழ் நிலையுற்றிருந்த காலத்தில் - பரசமய இருள் படர்ந்து மக்கள் நல்வாழ்வைச் சீர்குலைத்து நின்ற சமயத்தில் - இறைவன் திருவருட் கருணையால் ஞானசூரியனாக வந்து அவதரித்தவர் நாவலர் பெருமான். தமது நாட்டினதும் மக்களதும் சமயத்தினதும் மொழியினதும் வீழ்நிலையை உணர்ந்த நாவலர் பெருமான், மகா தியாக மூர்த்தியாய் ஒப்பற்ற பரோபகாரியாய் உருவெடுத்துத் தம்மைச் சைவத்துக்கும் தமிழுக்கும் நாட்டுக்கும் அர்ப்பணஞ் செய்தார். நாவலர் பெருமான் தம் நாட்டினதும் தாய்மொழியினதும் உண்மைச் சமயத்தினதும் உயர்வு கருதி நாட்டுடன் இரண்டறக்கலந்து தம்வாழ்வை நடத்தியதனாலேயே நாம் இன்றும் சைவர்களாகவும் தமிழர்களாகவும் இருக்கிறோம். இதனாலன்றோ "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே? சுருதி யெங்கே?" எனப் பெரியோர் புகழாரஞ் சூட்டினர்.

நாவலர் பெருமான் ஆரம்பித்து வைத்த பணியைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் முன்னெடுத்துச் சென்ற தலைமகன் சேர் பொன் இராமநாதன் அவர்கள். அவரது சகலகலா வல்லமையும் அவர் ஆற்றிய பணிகளும் பிரமிக்கத்தக்கவை. அந்தப் பட்டியல் மிக நீண்டது. இன்று யாழ் பல்கலைக்கழகமாக உயர்ந்து நிற்கும் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரியும் இராமநாதன் நுண்கலைக் கழகமும், கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலயம் ஆகிய மூன்று நிறுவனங்களும் முப்பெருஞ் சின்னங்களாக அன்னாரது பணிகளுள் ஒரு பகுதியை எமக்கு நினைவூட்டி நிற்கின்றன. இவ்விரு புருடோத்தமர்களுக்கும் நாம் செய்ய வேண்டிய - அவர் தம் - வாழ்க்கையைப்படியெடுத்து நடக்க வேண்டிய அவர்களது தொண்டுகளைப் பூர்த்தியாக்க வேண்டிய தொடர வேண்டிய - கடமைகளில் நாம் தவறி விட்டோம் - அலட்சியமாகவிருக்கிறோம் என்றே கூற வேண்டியுள்ளது அவர்கள் தம் குரு பூசை/ நினைவுதினம் அமையும் இவ்வேளையில் அவர்கள் காட்டிய தீர்க்க தரிசனமிக்க வழியிற் செயற்பட்டு நாட்டின் தாய்மொழியின் சற்சமயத்தின் உயர்வுக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றத் திடசங்கற்பம் பூணுவோமாக.

# ~கிரிவிளக்கு~

-சுன்னாகம் சிவத்திரு. அ. குமாரசுவாமிப்புலவர்

பூமாது வாழ்வுசெய்யும் பொன்னகர மென்னுநல்லைச்
சீமான் சிவன்பாதஞ் சிந்தைசெய்யுங் - கோமான்
சகம்புகழுங் கந்தவே டன்னிடத்தில் முந்திச்
சுகம்பெறுமவ் வள்ளுவனார் சொன்ன - மகன்றந்தைக்
காற்று முதவி அருமைத் திருக்குறளுக்
கேற்ற விலக்கியமா விங்குதித்துச் - சாற்றரிய
திண்மைபெறுஞ் சைவ சித்தாந்த சாகரத்தின்
றண்மை நலம்பருகிச் சைவமெனும் உண்மையுள
செஞ்சாலி யோங்கச் சிறந்தபிரசங்கமழை
அஞ்சாது பெய்யும் அருண்முகிலே - மஞ்சாருஞ்
சோலைப் பெருங்காழித் தோன்றறிரு நாவலர்கோன்
வேலையிடைக் கல்லின் மிதந்துவந்தோன் - சீலமிக்க
வாதவூ ர் வந்தவன்றே வாரதிரு வாசகங்கள்
ஓதிச் சிவபெருமா னெண்கழற்செம் - போதைநினைந்
துள்ளநெக்கு நெக்குருக வோட்டந் துடிதுடிப்பக்
கொள்ள வுடம்பு குறுவேர்வை- வெள்ளமெனக்
கண்ணீர் சொரியமயிர்க் கால்சிலிர்ப்ப மெய்ந்நடுங்க
எண்ணாத் தழுதழுப்ப இன்பவெள்ளத் - துண்ணாரும்
ஆனந்த முற்றே யயர்த்துப் பரவசமாய்
மோனச் சிவநூன் முறைப்படியே - ஞானமுறச்
செய்யும் சிவபூ சைச் செல்வா சிறியேனுக்
குய்யு நெறிகாட்டு முத்தமனே - துய்யதமிழ்ப்
பாடை யிலக்கியமும் பன்னு மிலக்கணமும்
தோடமறக் கற்றுணர்ந்த தோன்றலே - பீடுபெறும்
பன்னூற் கடல்கடைந்து பாலர்பெற வின்னமுதச்
சொன்னாடி நல்வசன சூத்திரமாச் - சின்னாளில்
இத்தரையில் யாவர்செய்வா ரென்னப் பலப்பலவாம்
புத்தகங்கள் செய்தருளும் புண்ணியனே - பத்தியினர்
பாவந் தொலைத்தருளும் பஞ்சாக் கரவிசிட்டம்
ஆவலொடும் பேசு மாறுமுக - நாவலனே
ஆற்றகில்லே னாற்றகில்லே னந்தோ நினதுபிரி
வாற்றகில்லே னாற்றகில்லே னார்க்குரைப்பேன் சீற்றமுடன்
வந்த விடப்பனவன் வார்த்தைக் கொடுஞ்சரத்தால்
நொந்தேற் கிரங்கியரு ணோக்கதனைத் - தந்தவனே
கூறும் பரசமய கோளரியே மெய்யுணர்ச்சி
தேறு நினதருமை சிந்திக்குந் தோறுமெல்லாம்
என்னை யயர்த்தே னெம்பெருமா னின்பெருமை
தன்னைப் பெருஞ்சேடன் றானிருந்து - பன்னாளாப்
பேசுகினு முற்றுப் பெறுமோ பெருந்தகையே
ஈசன் பெருங்கருணை யிப்படியோ - பேசியென்ன
கண்ணே யெனதிரண்டு கண்மணியே நாவலனே
மண்ணாதி யாமுடம்பு மாய்ந்தாலும் - எண்ணாருன்
கீர்த்தி யுடம்பு கெடுமோ கிளக்குமுண்மை
வார்த்தை யரிச்சந்திர மன்னவனே - போர்த்தவிருள்
நீக்கும் கிரிவிளக்கே நின்னிளமைக் கோர்குரவர்
வாய்க்குநா ளெந்நாளோ. மற்று.

# ஆறுமுகநாவலர்

## (சுன்னாகம், ஸ்ரீமத்.அ.குமாரசுவாமிப் புலவர்)

இவர் இலக்கியங்களிலும் வல்லவர். இலக்கணங்களிலும் வல்லவர். நீதி நூல்களிலும் வல்லவர். நியாயநூல்களிலும் வல்லவர். சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் வல்லவர். சைவாகமங்களிலும் வல்லவர். சைவாகமப் பெருமையைச் சாதித்துப் போதித்தலிலும் வல்லவர். கலை பயில்வோருளங் கொளக் கற்பிக்குஞ் செயலிலும் வல்லவர். உலகியல்களைப் பலதலையின்றி உணர்தலிலும் வல்லவர். செந்தமிழ் நூல்களைத் திருத்தியச்சிடும் செயலிலும் வல்லவர். செந்தமிழ் வாக்கியங்களைச் சிறப்புறத் தொடுத்துவரையுஞ் செயலிலும் வல்லவர். சைவப் பிரசங்கத்திலும் வல்லவர். புராணப் பிரசங்கத்திலும் வல்லவர். கசட்டு நெறிகளை மறுத்தெழுதுங் கண்டனங்களிலும் வல்லவர். செய்யுளியற்றுந் திறத்திலும் வல்லவர்.

கற்றதனாலாய பயனாகுங் கடவுள் வழிபாடு எனப்படுஞ் சிவபூசா கைங்கரியத்திலுஞ் சிறந்தவர். சிவதீக்கையே மோக்கம் பயக்க வல்லது என்னுஞ் சிந்தனை சொற் செயல்களிலுஞ் சிறந்தவர். தேவார திருவாசக பாராயணப் பற்றிலுஞ் சிறந்தவர். சிவனடியார் வழிபாட்டிலுஞ் சிறந்தவர். சைவாசாரத்திலுஞ் சிறந்தவர். சதாசாரத்திலுஞ் சிறந்தவர். சீவகாருணியத்திலுஞ் சிறந்தவர். அடைந்தோர்ப்புரக்கும் அருளிலும் சிறந்தவர். நன்றல்லதன்றே மறந்துவிடலிலுஞ் சிறந்தவர். கேட்பார்ப் பிணிக்குந்தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழியும் வாக்கு நலத்திலுஞ் சிறந்தவர். அவையஞ்சி மெய்விதிரா ஆண்மையிலுஞ் சிறந்தவர். சபை கூட்டிப் போதித்துப் பொது நன்மை புரிதலிலுஞ் சிறந்தவர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்துந் தாங்க நிற்கும் நிலையிலுஞ் சிறந்தவர்.

மறைகணிந்தனை, சைவநிந்தனை பொறாமன முடையவர். உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடு உறவு முடையவர். நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையுமுடையவர். சைவநிந்தனைகளையும் சைவநிந்தகர்களையும், புறச்சமயங்களையும் பிழைபட இயற்றும் நூலுரைகளையும் வழு நிலை காட்டிக் கண்டித்து வெறுத்தொழிக்குஞ் செயலுமுடையவர். அருமையுடைய செயலாற்றும் பெருமையுமுடையவர். மானமும் பண்பும் மறவா நிலையு முடையவர். புகழ், அதிகாரம், பொருள் வரவு முதலியன கருதி மனிதரைப் பாடுஞ் செயலில் செல்லா விரதமுமுடையவர். 'தான மெவ்வகையுளுந் தக்க வித்தியாதானமே சிறந்தது சாற்றுங் காலையே" எனச் சூதசங்கிதையாற் புகழப்பட்ட வித்தியாதானப் பெருந் தருமமு முடையவர்.

இவருடைய இலக்கியப் பயிற்சி வன்மையை இவரால் அச்சிடப்பட்ட பரிமேலழகருரை, திருக்கோவையுரை, பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் காட்டும். இலக்கணப் பயிற்சி வன்மையை இலக்கணச்சுருக்கம், நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து முதலிய இலக்கணங்கள் காட்டும். நீதிநூல் நியாய நூல்களின் வன்மையையுஞ் சைவ சித்தாந்த சாத்திர வன்மையையும் பெரியபுராண சூசனங் காட்டும். தருக்கசங்கிரகம், சைவ சமய நெறியுரை முதலியனவுங் காட்டும். பரிசோதன வன்மையை அச்சிட்ட நூல்களெல்லாங் காட்டும். செந்தமிழ் வாக்கியத் தொடை வன்மையைத் திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம் முதலியன காட்டும். கண்டன வன்மையைச் சண்டமாருதம்போற் சென்று தாக்கித் தலை குனிவிக்குஞ் சுப்பிரபோதம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலியன காட்டும். செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்தி விநாயகர் விருத்தம் முதலியன காட்டும்.

வித்தியாதானப் பெருந் தருமச் செயலை இவராலே தாபிக்கப் பட்டு நடந்துவரும் வண்ணார்பண்ணை சைவப் பிரகாசவித்தியாசாலையும் சிதம்பர சைவப் பிரகாசவித்தியாசாலையும் பிறவுங் காட்டும்.

### 'இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்'.

நாவலரவர்கள் ஒருமுறை திருவாவடுதுறை மடத்தில் தங்கியிருக்கும் போது தாம் அச்சிட எழுதிவைத்திருந்த சில நூல்களை ஒத்துப்பார்ப்பதற்காக அங்குள்ள நாலு ஏட்டுப் புத்தகங்கள் தமக்கு வேண்டுமென்று சந்நிதானத்திடம் கேட்டிருந்தார்கள். பின் அவர்கள் புறப்படும் போது சந்நிதானம் அப்புத்தகங்களை எடுப்பித்து நாவலரவர்கள் முன் வைப்பித்துவிட்டு அவற்றுளொன்றைத் தான் பின் எடுத்து வைத்துக்கொண்டது. நாவலரவர்கள் முறைப்படி நமஸ்காரஞ் செய்து விடைபெற்றுக் கொண்டு மற்ற மூன்று புஸ்தகங்களையு மெடுத்துக்கொண்டு சிறிதுதூரம் போனபின் சந்நிதானம், "இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்" என்று திருவாய் மலர்ந்து கொண்டுபோய்க் கொடுத்தது. எவருக்கும் எழுந்து மரியாதை செய்யும் வழக்கம் மடத்துச் சம்பிரதாயமல்லாமையால் இப்படியோருபாயஞ் செய்தது

# திருப்பெருந்துறை மன்னன்

(4ம் பக்கத்தொடர்ச்சி)

புணர்ச்சிப் பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப் பத்து, பாண்டிப்பதிகம், திருவே சறவு, அற்புதப்பத்து, சென்னிப் பத்து, திருவார்த்தை, திருவெண் பா, பண்டாய நான்மறை ஆகிய இருபது பதிகங்கள் இத்தலத்தில் பாடப் பெற்றவை.

பேருந்தில் சென்றால் கோவிலின் அருகிலேயே இறங் கலாம். கோவில், வீதியின் மருங் கேயே அமைந்துள்ளது.

கோயிலின் முன்புறம் திரு வாவடுதுறை ஆதீனப்பெயர்ப் பலகையுள்ளது. எதிரில் சற்று உள்ளடங்கி, குளமொன்று உள் ளது. வீதியிலிருந்து கோயிலுள் நுழையும் முன்பு மண்டபத்தின் மேற்புறம் குருந்தமர உபதேசக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. உட்புறம் சுற்றிலும் கடைகள். மண்டபத்தின் விதானம் மரத்தாலா கியது.

பார்வையைச் சற்று உயர்த் தினால் மேற்புறக்கொடுங்கை (கூரையின் வளைந்தபகுதி)யின் மேலே ஒரு குரங்கும் (கீழ்நோக் கியவாறு), ஒரு உடும்பும் (மேல் நோக்கியவாறு) செதுக்கப்பட்டி ருப்பதைக் காணலாம். அலை பாயும் குரங்கு மனதை அடக்கி, அதை ஆத்மநாதரின் திருவடியில் உடும்புப் பிடி போல நிறுத்தி அவருடைய திருவடிகளைச் சிக்கெனப்பிடித்து, உய்வுபெற வேண்டுமென்னும் எண்ணத்துடன் உள்ளே செல்க என்று நமக்கு உணர்த்துவது போல இஃது உள்ளது.

அடுத்துள்ள மண்டபம் பெரியது - ரகுநாத பூபால மண் டபம். அற்புதமான வேலைப்பாடு களுடைய பெரிய மூர்த்தங்கள், அகோர வீரபத்திரரும், ரண வீரபத்திரரும் உட்புறமாகத் திரும் பியவாறு தரிசனம் தருகின்றனர். மத்தியில் மேற்புறத்தில் விராட் சொரூபம் வண்ணத்தில்காட்சி தருகின்றது. பாலவனம் ஜமீன் தாரர்களின் முன்னோர்களான வேதவனப் பண்டாரம், ஆறுமுகப் பண்டாரம் ஆகியோர்களால் இம்மண்டபம் 330 ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட தாம்.

இடப்பால் சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதி. வல மாகச் சுற்றி வரும்போது துவார பாலகர்களையும் விநாயகரையும் தரிசிக்கிறோம். சுவரில் மிகப்பழ மையான வண்ண ஓவியங்கள் அழிந்த நிலையில் உள்ளன. அவற்றுள் ஒன்று அண்டரண்ட பட்சியின் வண்ண ஓவியம். இப்பறவை இரண்டு யானைகளை ஒருசேரத் தூக்குமளவுக்கு வலி மையுடைய பறவையாகத் திகழ்ந் ததாகச் சொல்லப்படுகிறது. பாம்பன் சுவாமிகள் பாடியுள்ள வீரபத்திரச்சக்கரத்தின் வண்ண ஓவியம் உள்ளது. அட்டாங்கயோக வளர்ச்சிச் சிற்பங்கள் மேற்புறத் தில் உள்ளன. தூணில் கண்ணப்பர், கண்களை அப்பும் கோலம் முதலியவைகளையும் காணலாம். மண்டபத்தின் ஓரங்களில் அமைந்துள்ள கொடுங் கைகளின் அழகைக் கண்டு ஆனந் தம் பெறலாம்.

கொடுங்கைகளின் அழகுக்குப் பெயர் பெற்றது இக் கோயில். பண் டை நாளில் ஸ்தபதிகள் கோயில் கட்டுவதற்கு உடன்படிக்கை எழு துங்கால் ஆவுடையார் கோயில் கொடுங்கைகளைப் போலத் தங்க ளால் அமைக்க முடியாது என்பதைக் குறிக்கும் வகையில் "ஆவுடையார்கோயில் கொடுங் கைகள் நீங்கலாக" என்று எழுதும் வழக்கம் இருந்ததாம். பெரிய கனமுடைய கருங்கல்லை, மெல் லியதாக இழைத்து, பல மடிப்புக் களாக அமைத்துள்ள இக்கலைத் திறனைப் பார்க்குங்கால் நம் அறி வுக்கும் எட்டாத அபூர்வ ஆற்றலை அறிந்தின்புறலாம்.

இரகுநாத பூபால மண்ட பத்தை அடுத்து வருவது நெடி துயர்ந்த ஏழுநிலை ராஜகோபுரம், தொலைவில் வரும்போதே வா என்று அழைக்கும் வான்கருணைச் சான் றான ஆத்மநாத சொரூபத்தி ன் ஸ்தூல அடையாளம். இராஜ கோபுரத்தையும் உள்கோபுரத் தையும் தாண்டுகிறோம்.அடுத்துள் ளது பஞ்சாட்சர மண்டபம். உட் புகுமுன் இவ்வாலயம் பற்றிய மேலும் சில தகவல்களை நினை விற் கொள்வோம்.

இக்கோவிலில் கலாத்வா, தத்துவாத்வா புவனாத்வா, வர் ணாத்வா, பதாத்வா, மந்திராத் வா முதலிய ஆறு ஆத்வாக் களைக் குறிக்கும் வகையில் ஆறு வாயில்கள் - ஆறுசபைகள் உள் ளன. அவை (1) கனகசபை (2) நடனசபை (3) தேவசபை (4)சத்சபை(5) சித்சபை (6)ஆநந் தசபை என்றழைக்கப்படுகின்றன.

கனகசபை 81 தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

நர்த்தன சபை (நடன / நிருத்தசபை) - பதஞ்சலி வியாக் ரபாதர்கள் பெருமானிடம் கருணை யை வேண்டிப் பெற்ற இடம். 224 புவன தீபங்களையுடையது. சூரனி டம் பயந்த தேவர்கள் தவஞ்செய்த இடமாகவும் சொல்லப்படுவது.

தேவசபை- சுந்தர பாண்டிய மண்டபம் என்பர். இங்கு ஏகாதச மந்திரங்கள் 11 தீபங்களாக உள் ளன.

சத்சபையில் 36 எண்ணுடைய தத்துவத் தீபங்கள் பிரகாசிக்கின் றன.

சித்சபையில் அகரமுதலான 51 எண்ணுடைய தீபங்கள் திகழ்கின் றன.

ஆநந்த சபையில் (கருவ றையில்) பஞ்சகலைகள் என்னும் சுடர் பிரகாசிக்கின்றது. இவ்வாறு இத்திருக்கோயிலில் தத்துவம் அனைத்தும் தீபவடி வங்களா கவே வைத்துக்காட்டப்பட்டுள் ளன. இக்கருத்தை மனத்துட் கொண்டு உட்செல்வோம்.

1. இப்போது நாமிருப்பது **பஞ் சாட்சர மண்டபம் எனப்படும்** கனகசபை. முந்நூறு ஆண்டு கட்கு முன்

(11ம் பக்கம் பார்க்க)

# திருப்பெருந்துறை மன்னன்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டப்பட்டதாம். கொடுங்கைகளை அழகாகப் பெற்றுள்ள இம்மண்டபத்தின் மேற்புறச் சுவரில் எண்ணற்ற புவனங்களைக் குறிக்கும் அட்சரங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

இங்குள்ள தூண் ஒன்றில் இருதலைகளும் ஒருடலும் கொண்டு பின்னிய நிலையிலுள்ள பாம்பும் இன் னொன்றில் சாமுத்ரிகா லட்சணத்தைக் காட்டும் பெண் முதலான சிற்பங்களும் உள்ளன.

இடப்பால் மாணிக்கவாசகர் மூலத்தானம் கிழக்கு நோக்கி உள்ளது. இங்குள்ள தூண் ஒன்றில் நவக்கிரகங்கள் கல்லில் அடித்து வைக்கப் பட்டுள்ளன. தனியாக இக்கோயிலில் நவக்கிரக சந்நிதியில்லை. சந்நிதி மேற்புறத்தில் 27 நட்சத்திர வடிவங்களும் கல்லிற் செதுக்கப்பட்டுள்ளன. எதிரில் உள்ள தூண்களில் ஆதீனக் குருமூர்த்திகள், கட்டளைத் தம்பிரான்கள் காட்சி தருகின்றனர். சந்நிதியின் வெளிச்சுவரில் வண்ண ஓவியத்தில் ஸ்பரிச / உபதேச / திருவடி தீட்சை ஓவியங்கள் உள்ளன. வலமாக வரும்போது திருவிளையாடற் புராண வரலாறுகளும் பிறவும் வண்ணத்தில் இருப்பதைக் காணலாம்.

2. அடுத்தது **நிருத்த மண்டபம் (நடனசபை, நர்த்தனசபை)** இடப்பால் குறவன், குறத்தி சிலைகள், அற்புதமான கலையழகு, தலைக்கொண்டை முதல் ஒவ்வொரு உறுப்பையும் கைவிரல் ரேகைகள் கூடத் தெளிவாகத் தெரியும் வண்ணம் செதுக்கியுள்ள கைவண்ணம் - வேடனின் நளினத் தோற்றம் - இவ்வாறே வலப்பால் காட்சி தரும் வேடன். யாகத்திற்கு இறைவன் சென்ற வடிவம் இஃதுதானே! நினைத்தாலே மெய்சிலிர்க்கும்.சற்று உள்ளே சென்றால் இடப்பால் வியாக்ரபாதரும் வலப்பால் பதஞ்சலியும் உள்ளனர். மற்றோர் இடத்தில் யாக்ஞவல்கியர், ஜனகர் உருவங்கள், நிருத்த மண்டபம் என்பதற்கேற்ப கல்விளக்குத் தூண் ஒன்றில் நிருத்த (நடன) சிற்பங்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக உள்ளன.

3. வாயிலைக் கடந்து உட்புகுந்தால் அடுத்து வருவது **தேவ சபை-சுந்தரபாண்டியமண்டபம்** (சுந்தரபாண்டிய மன்னனால் புதுப்பிக்கப்பட்டதாதலின் இப்பெயர் பெற்றது). இடப்பால் பிரகாரத்தில் மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தி சந்நிதி. இப்பெருமானைத் தரிசித்து விட்டுத்தான் உள்ளே மூலவரைத் தரிசிக்கச் செல்ல வேண்டும் என்பது இக்கோயில் மரபு. விநாயகர், வீரபத்திரர், பிட்சாடனர், ஊர்த்துவர் மூர்த்தங்களைத் தரிசித்தவாறே அம்பிகை சந்நிதியை அடைகிறோம். சுவாமியைப் போலவே அம்பாளும் தெற்கு நோக்கிய சந்நிதி, ஆத்மநாத சுவாமியைப் போலவே அம்பாளும் அருவம்தான். ஸ்ரீயோகாம்பாள் சந்நிதியில் திருமேனி இல்லை. சததள பத்ம பீடத்தில் -100 இதழ்கள் கொண்ட தாமரையாகிய பீடத்தில் - யோகாம்பாளின் திருவடிகள் மட்டுமே தங்கத்தாலான யந்திர வடிவமாக உள்ளன. முன்புறமுள்ள கல் யன்னல் வழியாகத் தான் தரிசிக்க வேண்டும். அதற்கேற்ப ஒளி பொருத்தப்பட்டுள்ளது. பூஜை செய்வோர் மட்டும் உள்ளே செல்வதற்குப் பக்கவாயில் உள்ளது. யோக சொருபியைத் தரிசித்து விட்டு வலமாக வரும்போது சுவரில் உள்ள சிவபுராணத்தையும் திருவாசகப் பாடற்பகுதிகளையும் படித்த வாறே வலம் வரலாம்.

அடுத்த தரிசனம் தல விசேடக் காட்சியான குருந்தமர உபதேசக் காட்சி. கல்லில் வடித்துள்ள குருந்தமரம் - கீழே இறைவன் குரு வடிவில் அமர்ந்திருக்க எதிரில் மாணிக்கவாசகர் பவ்வியமாக இருந்து உபதேசம் பெறும் காட்சி வடிக்கப் பட்டுள்ளது. ஆனிமகத் திருமஞ்சன நாளிலும் மார்கழித் திருவாதிரையிலும் மாணிக்கவாசகருக்கு உபதேசித்த காட்சி உற்சவம் நடைபெறுகிறது. அப்போது பூசை செய்யும் நம்பியார் சிவவேட மணிந்து, மாணிக்கவாசகரை எழுந்தருளச் செய்து உபதேசக் காட்சியைக் கண் முன் கொணர்கிறார். 'எந்தமராம் இவன் என்று என்னையும் ஆட் கொண்டருளும்' என்ற திருவாசகத்தை நினைவிருத்தித் தொழுது நகர்ந்தால், திருவாசகக் கோயிலைக் காணலாம். இங்குத் திருவாசக ஓலைச் சுவடியே இருப்பது விசேடம். நடராசர் சந்நிதி மூலமூர்த்தமாக (கற் சிலையில்) அம்பலவாணர்-ஆனந்தக் காட்சி. பாலசுப்பிரமணியரை வணங்கி, வலம் வந்து, வாயிலைக் கடந்து உள்ளே செல்கிறோம். மேற்பகுதியில் "நிலம்,நீர், நெருப்பு" என்று தொடங்கும் திருவாசகத் தோணோக்கப் பாடல் எழுதப் பட்டு, அதற்குரிய உருவங்களும் உள்ளன.

4. அடுத்த சபை, சத்சபை. இங்குள்ள விசாலமான கல் மேடையில் தான் சுவாமிக்குக் கைபடாத அன்னம் நிவேதிக்கப் படுகிறது. இதனால் இதற்கு அமுதமண்டபம் என்று பெயர்.

(13 ம் பக்கம் பார்க்க)

# உலக இந்து மாநாடு

(1ம்பக்கத்தொடர்ச்சி)

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள தேசங்களிற் குடிபெயர்ந்து வாழுகின்ற இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்துதல்.

4. இலங்கையிலும், பிற தேசங்களிலும் உள்ள கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இந்துசமயம், இந்து நாகரிகம் தொடர்பான பாட நெறிகளைப் பயிலுகின்ற மாணவர்களுக்கும், அவற்றைப் போதிக்கின்ற ஆசிரியர்களுக்கும் வேண்டிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுதிகளாக வழங்குதல்.

5. இலங்கையிலுள்ள இந்துக்களில் மிகப் பெரும்பாலானோர் சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள் என்பதால், சைவ சமயத்தின் பிரதான அம்சங்களைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கம் ஏற்படுவதற்கு வழி செய்தல்.

6. பல்வேறு சமயங்களையும் பண்பாட்டு நெறிகளையும் கொண்டவர்களின் மத்தியிற் பரஸ்பர புரிந்துணர்வினையும் ஒற்றுமையினையும் ஏற்படுத்துவதற்கான அவசியத்தை வலியுறுத்தல், உலக சமாதானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**மாநாட்டு நிகழ்ச்சிகள்:**

1. நான்கு நாட்கள் தொடர்ச்சி யாக நடைபெறும் 2ஆம் உலக இந்துமாநாட்டில், முதல் நாளான 02.05.2003 காலை நடைபெறவுள்ள வைபவரீதியான தொடக்க நிகழ்ச்சிகளுக்கு சிவாச்சாரியார்கள், ஆதீன குரு மஹாசந்நிதானங்கள், இந்துக்கள் கணிசமான அளவில் வாழுகின்ற நாடுகளின் பிரதானிகள் முதலானோர் அழைக்கப்படுவர்.

2. அதனைத் தொடர்ந்து இறுதி நாள் வரை ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளிற் செயலமர்வுகள் இடம்பெறும்.

3. செயலமர்வுகளின் இறுதியில் பொது அமர்வு இடம் பெறும்.

4. பொதுமக்கள் கலந்துகொள்ளும் வகையில் தினமும் மாலை வேளைகளில் இந்திய, இலங்கைக் கலைஞர்களின் மிகச் சிறந்த கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

5. அத்துடன் நான்கு நாட்களும் இந்து கலாசாரத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கும் வகையில் கண்காட்சி நடைபெறும். அரிய ஏட்டுச்சுவடிகள், பெறுமதி வாய்ந்த நூல்கள், கலைச் சின்னங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்படும்.

**கருத்தரங்குகளும், கட்டுரைகளும்:**

இம் மாநாட்டின் கருப்பொருள் **இந்து சமயமும் சமுதாயமும்** என்பதாகும். உலகின் பல நாடுகளிலிருந்தும் பெருமளவிலான ஆராய்ச்சியாளர்களும், ஆர்வலர்களும் இம்மாநாட்டிற் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநாட்டுக் கருத்தரங்குகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் மேல் வரும் விடயங்கள் பற்றியதாக அமைதல் வேண்டும்.

1. இந்து சமய வரலாறு.
2. இந்து சமய தத்துவ சிந்தனைகள்.
3. கோயில்களும் நுண்கலைகளும்.
4. கலைகளும் தொல்பொருட் சின்னங்களும்.
5. இந்து சமயமும் பிறசமயத் தொடர்புகளும்
6. சமயநிறுவனங்களும் சமூக சேவைகளும்.
7. புலம்பெயர்ந்தோர் வாழும் நாடுகளில் இந்துகலாசாரம்
8. தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாடு
9. சைவசித்தாந்தம்.

மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் அனைத்தும் கணனியில் அச்சிடப்பட்டு, நாலாயிரம் சொற்களுக்குக் குறையாமலும் ஏழாயிரம் சொற்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும். கீழைத்தேய மொழிச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுமிடத்துச் சென்னைத் தமிழ் அகராதியிலுள்ள முறைப்படி குறியீடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். கட்டுரையின் இரு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். அவற்றில் ஒன்று கணனியிற் பதிவு செய்யப்பட்ட பேழையிலும், மற்றையது கணனிப் பிரதியாகவும் இருத்தல் அவசியம். கட்டுரைகள் கிடைக்க வேண்டிய இறுதிநாள் **28.02.2003** ஆகும்.

**பேராளர்களையும் பார்வையாளர்களையும் பதிவு செய்தல் :**

பேராளர்களாகவும் பார்வையாளர்களாகவும் பதிவு செய்ய விரும்புபவர்கள் அனைவரும் மேற்கண்ட முகவரியுடன் தொடர்புகொண்டு உரிய படிவத்திலே, பதிவுக்கட்டணத்தை (வங்கிக் காசோலையாகவோ, வங்கிக் கட்டளையாகவோ) இணைத்து 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கட்டுரைகளும் பதிவிற்கான விண்ணப்பங்களும் அனுப்ப வேண்டிய முகவரி:

**பேராசிரியர் சி. பத்மநாதன்.**
**செயலாளர் நாயகம்.**
**2ஆவது உலக இந்து மாநாட்டுச் செயலகம்.**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு.**
**248-3/1 காலி வீதி.**
**கொழும்பு 04, இலங்கை.**
**தொலைபேசி 01-552641, 01-554978**
**தொலைநகல் 01-554805**
**மின்னஞ்சல் hinmin@sltnet. lk**

# திருப்பெருந்துறை மன்னன்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

5. அடுத்துள்ளது சித்சபை. பூஜை செய்வோர் நிற்குமிடம். ஐந்து(பஞ்ச) கலைகள் தீபங்களாகக் காட்சி நல்குமிடம்.

6. அடுத்து ஆனந்த மயமான ஆத்ம நாதரை நேரே காண்கிறோம். பரமசுவாமியான ஆத்மநாதர் எழுந்தருளியுள்ள கருவறையே - குருவருள் கொலு வீற்றிருக்குமிடமே- ஆநந்தசபை.

ஆத்மநாதசுவாமி அருவமாகக் காட்சியளிக்கிறார். அதற்குரிய இடத்தில் தங்கத்தாலான குவளை(ஆவுடையாரின்மேலே) சார்த்தி வைக்கப்பட்டுள்ளது. பின்னால் 27நட்சத்திரங்களைக் கொண்டதான திருவாசி உள்ளது. அதன் மேலே மூன்று விளக்குகளை வைத்துள்ளனர். அவற்றுள் சிவப்பு அக்கினியையும், வெண்மை சூரியனையும், பச்சை சந்திரனையும் குறிக்கின்றதென்பர். சுவாமிக்கு முன்னால் இருதூங்கா விளக்குகள் சுடர்விடுகின்றன.

மண்ணிலே பிறந்து இறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்ற நம்மை, அண்ணல் ஆட்கொண்டு அடியாரிற்கூட்டிய அதிசயத்தை' அகம் நெகிழ நினைத்து, கண்ணீர் பெருக்கி, கையாரத் தொழுது, வாய்குளிரப் பாடி, **"சடையவனே ; தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே"** என்று பிரார்த்திக்கிறோம்.சேர்ந்தறியாக் கையானிடம் கைகளைச் சேர்த்துக் குவித்து, நெஞ்சிற் குடிகொண்ட நிமலனைத் தியானிக்கிறோம்.

**சீரார்பெருந்துறை நம் தேவனடி போற்றி .**
**ஆராத இன்பம் அருளுமலை போற்றி**

பிரிய மனமின்றித் தரிசித்தவாறே வெளியே வந்து பக்கத்தில் சென்றால் தியாக ராஜ மண்டபத்தை அடையலாம். வழியில் வெயிலுகந்த விநாயகர் வீற்றிருக்கின்றார். பக்கத்தில் அக்கினி தீர்த்தம். இதற்குத் திருத்தமாம் பொய்கை என்றும் பெயர். தியாகராஜ மண்டபத்தில் மகாலிங்க மூர்த்தி தரிசனம் தருகிறார். எதிரில் முத்து விநாயகர் மண்டபத்தின் மேற்கூரையில் தொங்கும் கற்சங்கிலிகள் கண்களைக் கவர்கின்றன. கொடுங்கைகளின் அற்புதத்தை இம்மண்டபத்தில் காணலாம். எவ்வளவு கனமான கருங்கல்லை எந்த அளவுக்கு மெல்லியதாக இழைத்து, எத்தனை எத்தனை மடிப்புக்களாகக்கொண்டு வந்துள்ளார்கள் என்பதைக் கண்டு வியப்படைவதற்காக இடப்பக்கத்தின் கோடியில் இரண்டு மூன்றிடங்களில் துளையிட்டுக் காட்டியுள்ளார்கள்.

விழா நாட்களில் மாணிக்கவாசகர் இம்மண்டபத்திற்கு எழுந்தருளியிருந்து பின் புறப்பாடாகிறார். மண்டபத்தைக் கண்டு வியந்த நமக்கு அடுத்த தரிசனம் தலமரங்களான இரு குருந்த மரங்கள். இம்மரத்தினடியில்தானே பெருமான் வந்தமர்ந்தார் என்று நினைக்கையில் விழிநீர் பெருகி, இம் மரத்திற்குக்கிடைத்த பேறுகூட நமக்குக்கிடைக்க வில்லையே என்றெண்ணித் தொழுகிறோம். வலமாக வெளியேறுகிறோம். கோயிலின் பக்கத்திலுள்ள தெருக் கோடியில் ஆதீனத்தின் கோயில் நிர்வாக அலுவலகம் உள்ளது.

மூலவருக்கு மகுடாகமம் உத்தரபாகத்தின்படி பூஜைகள் நடைபெறுகின்றன. ஆனி மகத்திலும் (மாணிக்கவாசகர் குரு பூசைதினம்) மார்கழித் திருவாதிரையிலும் 10 நாட்கள் பெருவிழா நடைபெறுகிறது. **உற்சவம் மாணிக்கவாசக சுவாமிகளுக்கே.** இத்தலத்தில் நம்பியார்கள் எனப்படுபவர்களே முக்கிய பூசகர்களாவார்கள். இவர்கள் ஆத்மநாத சுவாமியை உள்ளிட்ட 301 பேர்களாவர். இத்திருக்கோயிலில் ஆறுவகைப்பட்ட பிரிவினர்களின் மூலமாகப் பூஜைகள் நடைபெறுகின்றன. அவ்விபரம் வருமாறு :-

1. மூலவருக்கும், குருந்தமரத் தடியிலுள்ள மூல சுவாமிக்கும் நம்பியார்கள்.
2. பரிவார தெய்வங்களுக்குச் சிவாசாரியார்கள்.
3. குதிரைச்சாமிக்குச் சைவப் பிள்ளைமார்கள்.
4. வீரபத்திரருக்கு வேளாளர் களும் கொத்தனார்களும்
5. மகாலிங்கம் மூர்த்திக்குஅஷ்ட சாஸ்திரக்காரர்கள்.

நாள்தோறும் ஆறுகால பூஜைகள். ஆத்மநாதருக்குஆறு காலங்களிலும் புழுங்கலரிசி நிவேதனம், ஒரு தவலையில் (வாயகன்ற பாத்திரம்)வடித்து, கைபடாமல் அப்பாத்திரத்தோடு கொண்டு வந்து அமுத மண்டபத்தில் உள்ள கருங்கல் மேடையில் (சுவாமிக்கு எதிரில்) அப்படியே கொட்டி, ஆவியோடு சுவாமிக்கு நிவேதிப்பதை நாமும் பார்த்துத் தரிசிக்கலாம். அர்த்தசாமத்தில் தினமும் புளியோதரை, எள் சாதம், பால் சாதம், உழுந்து சாதம், பாகற்காய், முளைக் கீரை நிவேதனம். திருவிழாக் காலங்களில் வழக்கமான மேற்படி நிவேதனங்களுடன் தேன்குழல், வடை, பிட்டு, சீயம், அதிரசம், தோசை முதலியவை சிறப்பு நிவேதனமாகும். இந்த நிவேதன ஒழுங்கு ஆனி மகத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் நடைபெறும். உற்சவகாலங்களில் மாணிக்கவாசகருக்கும் உண்டு.

ஆத்மநாதசுவாமிக்கு வருட முழுவதும் உள்ள நைவேத்யம் மாணிக்கவாசகருக்கும் இரு

(15 ம் பக்கம் பார்க்க)

# நாவலரின் பெருமை.

(2ம் பக்கத் தொடர்ச்சி )

வாழ்ந்திருத்தல் முடியாது. விரும்
பினரேயாயின் இவருடைய சம
காலத்தவராகிய மீனாட்சி சுந்தரம்
பிள்ளை, இராமலிங்க சுவாமி
களைப் போன்ற கவிஞர்க்
கொப்பக் கவியும் இயற்றியிருப்
பர். இதன் உண்மை இவர் பற்பல
சமயங்களிற் பாடிய தனிப்
பாடல்களானும் கதிரையாத்திரை
விளக்கப் பகுதியானும் பெறப்
படும். பலரும் அறியத்தக்க வசன
மே அக்காலத்தில் வேண்டப்
படுவது என்ற வுணர்ச்சியால்
இவர் கவி செய்து பெறத்தக்க புக
ழைத் செய்தாராகல் வேண்டும்.

இவ்வளவு பெருமை
வாய்ந்த இவரை அக்காலத்தில்
தமிழர் போற்றாதிருந்தாரல்லர்.
திருவாவடுதுறை யாதீனத் தலை
வர் நாவலர் என்ற பட்டத்தை
வழங்கியும், மதுரைத் திருஞான
சம்பந்த சுவாமி மடத்தலைவர்
இவருக்கு ஆறு கட்டிச் சுந்தர
வேடங்களை உரியவெனத் தர
முற்பட்டும், திருவண்ணாமலைக்
குன்றக்குடி மடத்தலைவர் இவ
ரைச் சிவிகையிலேற்றி ஊரெங்
கும் உலாவரச் செய்தும், சில
சைவ அன்பர் இவரை ஐந்தாங்
குரவரென நினைத்துப் பேணியும்
வந்ததாக அறிகின்றோம். ஆறு
கட்டிச் சுந்தர வேடங்களைத்
திருஞானசம்பந்த மடத்தார்
கொடுப்ப இவர் அவற்றைப் பெற்
றுக்கொள்ளாதது 'கொள்ளெனக்
கொடுத்தல் உயர்ந்ததன்று அத
னெதிர்கொள்ளென்றல் அதனினும்
உயர்ந்தன்று". என்ற பழம் பாடற்
பகுதிக்குத் தக்கதொரு பிற்கால
உதாரணமாதல் காண்க.

இவர் ஒழுக்கத்திற் றலை
சிறந்தவர் என்றும் தமிழுக்கும்
சைவத்திற்குந் தொண்டாற்றும்
பொருட்டு மணந்து பெறுமின்
பத்தை வேண்டாமெனத் துறந்
தவரென்றும், தருமசிந்தையுடை
யவரென்றும், பிறரைப் பாதுகாக்
கும் பெற்றியுடையவர் என்றும்
அறிகின்றோம். 'நனவிலும் நன்ன
டை தணவாத சீலன்' என்று
சோடசாவதானம் சுப்பராயச் செட்
டியார் அவர்களாற் சிறப்பிக்கப்
பட்டவர். இவர் கொடுக்கப்பட்ட
பொருள்களைப் பற்பல சமயங்
களிற் பெற மறுத்தார் என்பதால்
இவரது தன்னலமின்மை புலப்
படும். இவர் சைவர்களுக்குச்
செய்ததொரு விஞ்ஞாபனம்
திரு.த.கைலாசபிள்ளை அவர்
கள் இவரைக் குறித்தெழுதிய
புத்தகத்தில் வெளியிடப் பட்டிருப்
பது தரும சிந்தையைத்
தெற்றெனக் காட்டும். நந்தனார்
சரிதம் இயற்றிய கோபா
லகிருஷ்ண ஐயர் என்பாரை இவர்
பாலித்தது பிறரைப் பாதுகாக்கும்
இவரது பெற்றியைக் காட்டும்.
சென்னை யில் வாழ்ந்து வந்த ஒரு
காலத்தில் மடைப் பையன் எவ
னும் இல்லாத காரணத்தினாலே
பூசை நைவேத் தியங்களை
மாத்திரமேயுண்டு பிறிதொன்றும்
வேண்டாது இவர் இருந்து வந்தது
இவருடைய தியாக புத்தியையன்
றோவுணர்த்தும்.

இவரது சைவப்பற்று சொ
ல்லுந்தரத்ததன்று. " அவ நெறி
யாய வனைத்துங் களைந்து சிவ
நெறி வளர்க்கும் திவ்விய குண
த்தர்" என்றும். "சைவமெனும்
பயிர்வளர்க்கும் எழிலிபோல்வார்"
என்றும் மீனாட்சிசுந்தர நாவலர்
அவர்கள் இவரைப் போற்றி
யுள்ளாரேயாயின் இவர் திறன்
எத்தகைத்தாயிருத்தல் வேண்டும்!
திருநீறு பூசியே எக்காலும் வே
லைக்கு வருவேனென்ற நிபந்த
னையைப் 'பர்சிவல்" துரை
என்பவரிடத்தில் இவர் செய்து
கொண்டனர் என்றால். தமை
யனார் தியாகராசர் என்பார்
பெரிய புராணக் கதைகள்,
கட்டுக்கதைகள் என்று சொல்
லியதைக் கேட்டு வாளினால் அவ
ரைக் கொல்ல முற்பட்டனரென்
றால், இவருடைய அழுத்தமான
சைவப் பற்று சாதாரண மக்க
ளிடைக் காணப்படுவதொன்றன்று.

'சுண்ணவெண் சந்தனச்
சாந்தும்....... திண்ணென் கெடிலப்
புனலும்" உடையார் ஒருவரது
தமராகிய இவர் அஞ்சத்தக்கதும்
உண்டோ? உண்டெனின், இவர்
அஞ்சியன வெல்லாம் பழியே.
அஞ்சாதிருந்தது வலியுடைய
மக்களையாம். இதற்கு உதாரண
மாக, செல்வாக்குமிக்க 'டைக்"
துரையென்பார்க்கு இவர் வாய்
பேசாது கையினால் தமையனாரு
டைய வீட்டைக் காட்டிச் சென்
றமை சொல்லப்படுவதுண்டு. அங்
ஙனமே பொருள் மிகப் படைத்த
சேதுநாட்டுத் தலைவர் பொன்
னுச்சாமித் தேவரிடம் இவர் வருவ
தாயிருந்தால் தேவர் எழும் போ
தெல்லாந் தாமெழுமாறு வற்புறுத்
தக்கூடாதென்றும் அவர் முன் இவர்
மேற்றுணி எடுத்து விட வேண்டு
மென்று பணிக்கக்கூடா தென்றும்
இணைய பிறவானும் நிபந்தனை
களைச் செய்து கொண்டு இவர்
அங்குச்சென்றார் என்றால், இது
பொருளுடை யாரிடத்தில் அஞ்
சாதிருந்த இவரதாற்றலை
வெளிப்படுத்துகின்ற தன்றோ?

இவர் பழமையைப் பெரி
தும் போற்றி யொழுகி வந்தரென்
பது, 'ரோசாமலர்" இவரது பூசை
யில் உபயோகப்பட்டுவந்ததே
னும் வடமொழிப் புட்பவிதியில்
சொல்லப்படாத காரணத்தால்
தாம் இயற்றிய தமிழ்ப் புட்ப
விதியில் இவர் சேர்க்காது
விட்டமையால் இனிது புலப்படும்.
இப்பழமை விரும்பியார். 'பிரிட்
டோ" துரைக் கெதிராக, திரு.
பொ.இராமநாதன் அவர் களுக்கு
தவியாக இலங்கைச் சட்டமன்றத்
தேர்தலில் உழைத் ததையறியும்
நாம் இவர் புதுமை யிலும் சிலகா
லம் இணங்கினவர் என்பதையறி
தல் கூடும்.

எல்லாவற்றிலும் சிறப்பாக
இவருடைய வாழ்க்கை வரலாற்
றிலிருந்து எனக்கு உவகையளி
க்குஞ் செய்தி இவர் சைவமக்
களாவார் பாவங்களை ஒழித்துப்
புண்ணியங்களையே செய்ய
வேண்டும் என்று வற்புறுத்தியிருப்
பது. இவர் இங்ஙனம் நான்காம்
பாலபாடப் புத்தக முதற்பாடத்தில்
மாத்திரமன்றித் தம் தமையனா
ருக்கு எழுதிய கடிதமொன்றிலும்
வற்புறுத்தியுள்ளார். 'சிவ வழி
பாட்டிற்கு அங்கம் பாவங்களை
வெறுத்தலும் புண்ணியங் களைச்
செய்தலும். இவையல்லாத
வழிபாடு அபத்தியத்தைத்

(15ம் பக்கம் பார்க்க)

# திருப்பெருந்துறை மன்னன்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

விழாக்களிலும்(10+10=20 நாட்களில்) படைக்கப்படுகின்றது.

அக்கினி நட்சத்திர காலங்களில் சுவாமிக்கு இளநீரும் பானகமும் பாசிப்பருப்பும் தனித்து நிவேதனமாகும்.

கோயில் கல்வெட்டுக்களில் இத்தலம், 'மிழலைக் கூற்றத்து நடுவிற் கூற்றம் பிரம தேசம் தனியூர் திருப்பெருந் துறையான பவுத்திர மாணிக்கச் சதுர்வேத மங்கலம்" என்று குறிக்கப் பட்டுள்ளது. சுந்தரபாண்டிய மண்டபம், அம்பாள் மண்டபச் சுவர்கள், பஞ்சாட்சர மண்டபம் முதலிய இடங்களில் கல்வெட்டுக் கள் நிரம்ப உள்ளன. இவற்றிலிருந்து அக்காலத்தில் கோயிலுக்கும் சுவாமிக்கும் விடப்பட்ட நிபந்தங்கள் குத்த கைக்காரர் களின் பத்திரங்கள், கும்பாபிஷேகம் நடைபெற்ற விபரங்கள், நிர்வாகச் செய்திகள் முதலியவை தெரியவருகின்றன.

இத்திருக்கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் ஆதிகயிலாய நாதர்கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய தனிக்கோயில். மாணிக்கவாசகருக்கு முதல் உபதேசக்காட்சி அங்குதான். இக்கோயில் மாணிக்கவாசகருக்கு முன்பிருந்தே உள்ளது. இப்பகுதிகள் அனைத்தும் ஒரு காலத்தில் காடாக இருந்ததாம். தற்போது ஆதிகயிலாயநாதர் கோயில் உள்ள இடத்தை, வடக்கூர் (வடக்களூர்) என்றும் ஆவுடையார் கோயில் உள்ள இடத்தைத் தெற்கூர் என்றும் சொல்கின்றனர்.

அட்டமூர்த்தி அழகன் இன்னமு
தாய ஆனந்தவெள்ளத்தன்
சிட்டன் மெய்ச்சிவலோக
நாயகன்
தென் பெருந்துறைச் சேவகன்
மட்டுவார் குழல்மங்கை யாளை
யோர்
பாகம் வைத்த அழகன் தன்
வட்டமாமலர்ச் சேவடிக் கண்நம்
சென்னி மன்னி மலருமே.

-சென்னிப் பத்து

# நாவலரின் பெருமை

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளாமலும் பத்தியங் கொள்ளாமலும் தின்கிற மருந்துக்குச் சமானமாகும்" என்னும் பகுதி அக்கடிதத்திற் காணப்படுகின்றது.

இப்பெரியார் இவ்வுலகை நீத்து ஐம்பத்தெட்டாண்டுகளாகியும் அவரை இன்று காறும் தமிழ் நாட்டாருஞ் சைவரும் போற்றி வருவதொன்றே இவரது சிறப்பை விளக்கும். இவர் பெயர் தமிழ் நாட்டில் புல்லும் பூண்டும் உள்ள வரையில் மக்களால் மறக்கப்படாது என்று கூறுவது மிகையாகாது. இவரைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளத் தமிழருஞ் சைவரும் முன் வருவாராக.

# சைவப் பெருநாட்கள்

## (கார்த்திகைப் பூரணை முதல் மார்கழிப் பூரணை வரை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கார்த்திகை | 02 | திகதி | 18.11.2002 | திங்கள் | சோமவார விரதம் |
| | 03 | திகதி | 19-11-2002 | செவ்வாய் | பூரணை விரதம், திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், சர்வாலய தீபம். |
| | 04 | திகதி | 20.11.2002 | புதன் | விநாயக விரதாரம்பம் |
| | 07 | திகதி | 23.11.2002 | சனி | சங்கடஹரசதுர்த்தி, பிரதோஷ விரதம் |
| | 09 | திகதி | 25.11.2002 | திங்கள் | சோமவார விரதம் |
| | 11 | திகதி | 27.11.2002 | புதன் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை |
| | 16 | திகதி | 02.12.2002 | திங்கள் | பிரதோஷ விரதம், சோமவார விரதம் |
| | 18 | திகதி | 04.12.2002 | புதன் | அமாவாசை விரதம் |
| | 21 | திகதி | 07.12.2002 | சனி | சதுர்த்தி விரதம் |
| | 22 | திகதி | 08.12.2002 | ஞாயிறு | சேர் பொன் இராமநாதன் நினைவு தினம் |
| | 23 | திகதி | 09.12.2002 | திங்கள் | விநாயக சஷ்டி விரதம், சோமவாரம் |
| | 26 | திகதி | 12.12.2002 | வியாழன் | திருவெம்பாவைப் பூஜாரம்பம் |
| மார்கழி | 01 | திகதி | 16.12.2002 | திங்கள் | மார்கழி மாதப்பிறப்பு |
| | 02 | திகதி | 17.12.2002 | செவ்வாய் | பிரதோஷவிரதம், கார்த்திகை விரதம் |
| | 04 | திகதி | 19.12.2002 | வியாழன் | பூரணை விரதம் |

# Navalar's Personality

**SAIVAPERIYAR PULOLYOOR S. SIVAPATHASUNDARAMPILLAI.**

NAVALAR was deeply religious, His activities proceeded from his religion, Service to man was service to God. He served the Shaiva Religion not because it was his religion or it was the true religion but because he loved Shiva. Even his service to the Tamil Language was regarded by him as service to his Religion, bacause he thought that the study of Thamil was not an end but a means to love and serve God.

'கற்றதனால் ஆய பயன் என்
கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அ ரெனின்'

He knew no fear, because he did not prize even his body. We have seen that attempts were made on his life both in Jaffna, and in India. But these did not deviate him in any way from his cause of action. He had a regard for religious men. But he never respected wealth or power. Though he received contributions for his school, he never accepted presents made to him personally. When the head of Thiruavaduthurai Adhinam visited his school at Chidambaram, he presented him with a shawl and two vesties. Navalar sent the price of these presents to him, requesting him to make with that money the necessary repairs in Marai -Gnana Sambandar's temple near Chidambaram. The successor elect of the Adhinam sent him eighty rupees. He returned the same to him by a bank draft. Just as he was free from fear, he was equally free from ordinary anger. One day, his cook, in a fit of madness, took a large quantity of rice and threw it on his face. Navalar was calm and unmoved.

He sympathetically tried to find out why he did it. But Navalar was not free from righteous indignation. One day his elder brother, Tyagarajah wishing to know the extent of Navalar's religious feeling, said to his hearing that the stories of Periya Puranam were all false. Navalar became mad with fury and chased his elder brother who got into a room and locked himself in. Others in the house intervened and Navalar withdrew. But, when an insult to his religion or to his country came in writing, there would be no one to intervene and his ire had full sway. One Veerasamy Mudaliar of Narasinga Puram had somewhere written disparagingly of Jaffna. Navalar came to know of this. He collected materials not only of the writer but also of his superior, and wrote a counter attack (This is said to be the joint work of Navalar and Shivapadanesapillai of Madras.) which showed no sign of mercy. The booklet that Navalar wrote was full of the glories of Jaffna and the glorious stupidities of the Mudaliar. From the list of glories I quote one. The temple of Rameshvaram, held in great veneration even by the people of Northern India was built by a king of Jaffna according to an inscription in the Holy of Holies of the temple. The temple of Vedaranyam was built by Tillainatha Tambiran of Jaffna, to which the Rajah of Tanjore gave extensive lands and other sources of income, as a reward for the cure of a disease of the Rajah's son, effected by the Tambiran with no medicine other than Sacred Ashes. Navalar also made a personal counter attack on the Mudaliar. The Mudaliar was the third assistant to the Head Thamil Pandit of a school. Navalar, who had access to the subject matter of an answer paper written by the Head Pandit in public examination, quotes enough from it to show that he did not know even the elements of Thamil Grammar. Of such an ignoromous the Mudaliar was the third assistant, and was afterwards relieved even of this humble post, in consequence of his utter inefficiency. Those who can relish an unsparing merciless attack will do well to read this pamphlet.

Navalar had good social instincts. One day, when he was teaching in his school , he heard the cry, 'fire". He darted like an arrow, reached the house that was burning, and did all he could, along with others, to put out the fire. One of his pupils had an attack of small pox. He visited him everyday, in spite of the insisitence of his friends that he should not go there. He took part in politics too. When a successor had to be appointed in place of Sir Muttukumaraswamy as the Thamil member of the Legislative Council, he held several meetings in support of Mr. (later Sir) P.Ramanathan agaianst the candidature of Advocate C. Brito, a personal friend of his, but not one so well qualified as the former.

Navalar was a scholar and author, teacher and preacher, exemplar and reformer, mighty genious and indefatigable worker, lover of Thamil, lover of Shaivaism and lover of God. Another like him the Thamil land has not seen for several centuries.

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K.K.S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna 19.11.2002 (Full moon Day).